# இளங்கோ அடிகள்

தமிழ்நாட்டைச் சேர சோழ பாண்டியர்கள் ஆண்டார்கள். அவர்கள் மூவேந்தர் எனப்பட்டனர். சேரநாட்டைச் சேரர்கள் ஆண்டுவந்தனர். சேரமன்னன் நெடுஞ்சேரலாதனுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் சேரன்செங்குட்டுவன் இளையவன் இளங்கோ. ஒருநாள் அரசவைக்கு வந்த கணிகன் ஒருவன் இளங்கோதான் பேரரசனாக வருவான் எனக் கூறினான். இதனைக் கேட்ட இளங்கோ கடுஞ்சினத்துடன் எழுந்தான். கணிகரே என்ன கூறுகிறீர். இது தமிழகம் தமிழர் பண்பாட்டில் உயிரை விட உயர்ந்தது மானம். அண்ணன் சொற்படி தம்பி நடப்பது தான் எங்களது குடிமானம் எனக் கூறினான்.

தந்தையே பெரியோரே என்னைப் பொறுத்தருள்க! எனது இளவரசு உரிமையை இப்போதே துறக்கிறேன். இனி நான்துறவி. தமிழே என் துணை! என்றான். அன்று அந்தச் சூழுரையுடன் அவையை விட்டு நீங்கினார் இளங்கோ. பின்னாளில் இளங்கோ அடிகளானார். தமிழ்ப் பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்தை எழுதினார். இதனால் தமிழர் உள்ளங்களில் பேரரசராக விளங்குகிறார்.